# எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி

உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றுங்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினாரும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம்ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.

கனவு 10 கற்பனை 12] திருச்சி 15—12—67 [ தனிப் பிரதி 25 காசு

# சிந்தனைக்கு.....

நியாயத்திற்கும் தர்மத்திற்கும் ஒவ்வாத ஒன்றைச் செய்வது பாபம். இது பாபம் என்பதை அறியாமல் செய்பவர் பலர். பாபம் இது என்பதை அறிந்தாலும் சூழ்நிலையாலும், நிர்பந்தத்தாலும் பாபம் செய்பவர் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் அதனை செய்துவிட்டு பின் மனம் வருந்துவார்கள். ப்ராயச்சித்தம் செய்ய முனைவார்கள். மனதை தூய்மை படுத்துவதே ப்ராயச்சித்தத்தின் பலன். இவர்களுக்கெல்லாம் பாப மன்னிப்பு உண்டு. ப்ராயச்சித்தமும் உண்டு.

ப்ராயச்சித்தத்தாலும், பரிஹாரத்தாலும் தீர்க்க முடியாத கொடிய பாபம் ஒன்று இருக்கிறது. கொலை பாபத்தைவிட கொடியது. ஆலகால விஷத்திற்கு ஒப்பானது. கல்விமான்கள், செல்வர்கள், அதிகாரம் படைத்தவர்கள் ஆகிய மூவருக்கே உரித்தானது இந்தப் பாபம். தீராத தொழு நோயைவிடக் கொடியது. கொடிய நோய் ஒன்று ஒரு உடலைப் பற்றுமானால் உயிர் போனதும் நோயின் உபாதை இருக்காது. உடலோடு நோயும் போய்விடுகிறது. உயிர் போன பின்பும், உடல் போன பின்பும் சந்ததியாரையும் பாதிக்கச்செய்வதும் தீராதபழிக்கு ஆளாக்குவதான பாபத்திற்குத் தான் அகம்பாவம் என்று இனம்கண்டு முன்னவர்கள் பெயர் சூட்டினார்கள்.

அகம்பாவம், படித்தவர்களுக்கு, செல்வர்களுக்கு, அதிகாரம் படைத்தவர்களுக்கு மிகச் சுலபமாக வருகின்ற பெருவியாதி. இவ்வியாதி வந்தவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ளும் தற்கொலைப் பட்டாளம் என்று சொல்லலாம்.

அகம்பாவம் பீடித்த ஒருவர் வாயிலிருந்து கடுஞ்சொற்கள் உதிரும். தானே நீதிதேவன் என்று கருதி, உலகத்தை நோக்கித் தீர்ப்பு வழங்கவும், தண்டனை தரவும் முற்படுவார். சுருக்கமாகச் சொல்வதென்றால் தன் மனதை பாபச் சூழ்நிலையில் வைத்து தன் மனச்சாட்சியையே கொன்றுவிடுவார்.

புராணக் கதைகளில் வரும் ராட்சதர்கள் யார் என்று ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்ப்பது நல்லது. ராட்சதர்கள் என்று குறிப்பிடப்படுகிறவர்கள் அனைவரும் நன்கு படித்தவர்கள். மிகுந்த தபோ வலிமை உடையவர்கள். நுட்பமான புத்தி தீட்சண்யம் உடையவர்கள், வைராக்கிய புருடர்கள், திட சித்தர்கள், எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள். இத்தகைய சிறப்பு பல உடையவர்களை எப்படியோ அம்பாவம் பீடித்துவிடுகிறது. அகம்பாவம் பீடித்ததும் மனிதத்தன்மையை இழந்து ராக்ஷத தன்மையுடையவர்களாக மாறிவிடுகிறார்கள். ராக்ஷதர்கள் தாம் அழிவது மட்டுமல்ல. தம் குடும்பத்தையே பலி கொடுக்க வேண்டியிருக்கிறது.

வலிமை, வாய்ப்புப் படைத்தவர்களையே அகம்பாவம் அழித்துவிடுகிறது என்றால் சாதாரண மக்கள் அகம்பாவம் கொள்ளலாமா? எப்பாபம் செய்து சுடழிந்து போனாலும் போங்கள். அகம்பாவத்திற்கு ஆளாகாதீர்கள் என்று சொல்லத் தோன்றுகிறது.

நம்மை அகம்பாவம் பற்றாமல் இருப்பதற்கு ஒரே வழி. அது சர்வேசுவரனை சரண் அடைவது ஒன்றுதான் என்பதை சற்று சிந்தித்தால் எவருக்கும் புரியாமல் போகாது.

—*ரெட்டியார்.*

# பரிபூர்ணம்

[நா. சேதுராம்]

★

ஓம் பூர்ண மத: பூர்ண மிதம் பூர்ணாத்
பூர்ணமுதச்யதே |
பூர்ணஸ்ய பூர்ண மாதாய பூர்ண
மேவா வசிஷ்யதே ||

ஓம். அது பூர்ணம். இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணம் உதயமாயுள்ளது. பூர்ணத்தினின்று பூர்ணத்தையெடுத்தும் பூர்ணமே மிஞ்சி நிற்கின்றது.

இது உபநிஷத்தில் உள்ள தியான ஸ்லோகம். அது பூர்ணம். அது என்றால் பிரம்மம்.

பரப்பிரம்மம். பிரம்மம் பூர்ணமானதே. பூர்ணமில்லாவிடில் அது பிரம்மம் அல்ல. இகமும் பூர்ணமானதே. பிரம்மத்திலிருந்து உண்டானதால் இகத்திற்கும், அதாவது ஜீவாத்மாக்களுக்கும், இந்த உலகத்திற்கும் பூரணத்துவம் உண்டு. எப்படி சமுத்திர ஜலத்தில் ஒரு துளி எடுத்து உண்டாலும் உப்பாக உள்ளதோ அது போல் பரப்பிரம்மத்தின் ஒரு துளியாகிய இந்த உலகத்திற்கும் பரப்பிரம்மத்தின் மூலதத்துவமாகிய பூரணத்துவம் உண்டு. ஆகையால் இதுவும் பூர்ணம். பூர்ண தத்துவம் உடைய பிரம்மத்திலிருந்து பூர்ண தத்துவம் உள்ள உலகு உண்டானது. உலகு இப்போது தனித்து நிற்கும் தன்மை உடையது. தனியாக பிரம்மத்திலிருந்து பிரிக்கலாம். தாயார் பூர்ணமாக வளர்ச்சியடைந்த பூர்ணத்துவம் உடைய உயிர். தாயின் வயிற்றிலிருந்து உதித்த சிசு பூர்ணமாக வளர்ச்சியடைந்த பூர்ணத்துவம் உடைய உயிராகும். தாயின் உடலிலிருந்து சிசு பிறந்ததுபோல் பிரம்மத்திலிருந்து உலகு பிறந்தது. இரண்டும் தனித்தனியே இயங்கும் பூர்ணத்துவம் உள்ளவைகளே. ஆகையால் பூர்ணத்திலிருந்து பூர்ணம் உதயமாகி உள்ளது.

மேலும் ஒரு பொருளிலிருந்து ஒரு பாகத்தை பிரித்தெடுத்தால் மீதி உள்ள பொருள் ஏற்கனவே உள்ளதை விட பிரித்தெடுத்த அளவு குறைவுபடும். இது ஸ்தூல விதி. ஆனால் சூக்ஷ்ம பொருள்களைப் பற்றிய விதி அள்ள அள்ளக் குறையாத விதி. அள்ள அள்ளக் குறைந்தால் அது சூக்ஷ்ம பொருள் ஆகாது. ஒரு தீபத்திலிருந்து மற்றொரு தீபத்தை ஏற்றுகிறோம். ஆனால் புதிய தீபத்திற்கு ஒளி ஏற்றிய பழைய தீபம் தன் நிறைவு பெற்றேயுள்ளது. எப்போதும் போல் பழைய பிரகாசத்துடன் எரிகிறது. அதேபோல் நாம் மற்றவர்களுக்கு வித்தை புகட்டும் போதும் நம் மூளையில் உள்ள வித்தையும் குறைவதில்லை. புதிதாக கற்றுக் கொள்ளும் மாணாக்கனுடைய மூளையிலும் கற்றுக்கொடுத்த வித்தை அவனவன் சக்திக்கேற்ப பிரகாசிக்கும்.

எத்தனையோ கோடி ஜீவராசிகள் பிராண வாயுவை சுவாசித்து வந்தாலும் உலகில் உள்ள பிராண வாயுவின் விகிதாசாரம் குறைவதில்லை. எத்தனையோ கோடிக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டாலும் உலகில் உள்ள மண் குறையவும் இல்லை. கூடவும் இல்லை. எத்தனையோ காலன் தண்ணீர் மேகமாக மாறினும் சமுத்திர ஜலம் குறைவுபடவில்லை. எத்தனையோ யோஜனைகள் உதித்தும் மறந்தும் போனாலும் மனித மனம் குறைவுபடவில்லை. பழைய யோஜனைகளுக்கும் இடம் உண்டு. புதியனவைகளுக்கும் இடம் உண்டு. குறைவு என்பது கிடையாது. ஆகாயத்தில் உள்ள பரிமாணங்களும் எவ்வகையாலும் குறைவதில்லை. ஆகையால் நாம் கண்கூடாகக் காணலாம். பஞ்சபூதங்களை ஒட்டியவைகளும் மனிதனுடைய ஆளும் அறிவுக்குப் பிறப்பிடமாகிய மனம் என்பதும் பூர்ணத்துவம் பெற்றவைகள். பிரம்மத்தின் வழித்தோன்றல்களே அவை.

பிரம்மத்தின் குணமே பூர்ணத்துவம். பூர்ணத்துவம் குறைவுபடின் அது பிரம்மம் அல்ல. பிரம்மம்போல் மாயையால் நமக்கு தோற்றமளிப்பவையாகும். ஆனால் மனிதனின் மனம் பகுத்தறிவின் பிறப்பிடம் பிரம்மத்தின் வழிவந்தமையின் பூர்ணத்துவம் பெற்றதே. எது பிரம்மம், எது பூர்ணமானது, எது நிலையானது, எது மாயையினால் வெறும் தோற்றமளிப்பது என்று கூர்ந்து கவனித்து தன்னையும் தன் பூர்ணத்துவத்தையும் தன் பிறப்பிடமாகிய பிரம்மத்தின் தத்துவத்தையும் பூர்ணத்துவத்தையும் ஆராய்ந்து நானும் பிரம்மமாகவே உள்ளேன்.

"அஹம் பிரஹ்மாஸ்மி"
"பிரஹ்மைவ அகமஸ்மி"
"தத்வமஸி"
"பிரக்ஞானம் பிரம்மா"

என்பதை உணர்ந்தால் அதுவே மோக்ஷம். அதுவே பிரம்மவித்தை. அதுவே பரிபூர்ணம்.

---

# சென்னையில் தமிழ் எழுத்தாளர் மாநாடு

இம் மாதம் 16, 17 தேதிகளில் பிரபல நாவலாசிரியர் திரு. அகிலன் அவர்கள் தலைமையில் சென்னை ஏ. வி. எம். ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் தமிழ் எழுத்தாளர் பதினைந்தாவது மாநாடு நடைபெறுகிறது.

உயர்திரு. சி. சுப்ரமண்யம் அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைக்கிறார்கள். உயர்திரு. என். மகாலிங்கம் அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து வரவேற்கிறார்கள்.

மூதறிஞர்கள் திரு. ஒளவை துரைசாமி பிள்ளை அவர்களுக்கும், திரு. ப. கோதண்டராமன் அவர்களுக்கும் கேடயங்கள் வழங்கப்படும். பிறமொழி வல்லுனர்களான திரு. ரா. தேசிகப் பிள்ளை அவர்களுக்கும், டாக்டர் மாலிக் முகம்மது அவர்களுக்கும் பதக்கங்கள் வழங்கப்பெறும்.

சிந்தனைச் செல்வர் சுகி சுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் கருத்தரங்கும், திரு. கி. வா. ஜ. அவர்கள் தலைமையில் பட்டி மன்றமும், திரு. ஏ. ஜி. வெங்கடாச்சாரி அவர்கள் தலைமையில் பிறநாட்டு எழுத்தாளர்கள்பற்றிய அறிமுகமும் நடைபெறும்.

சிறந்த சொல்லேர் உழவர்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு உரையாற்றுகிறார்கள். திரு. சோ. சிவபாதசுந்தரம் மாநாட்டு அமைப்பாளர், திரு. மா. சு. சம்பந்தன் அவர்கள் பொதுச் செயலாளராக இருந்து பணியாற்றுகிறார்கள். அனைவரும் வந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

எழுத்தாளன்

கனவு 10] பிலவங்க, மார்கழி (15-12-67) [கற்பனை 12

# உலகத் தமிழ் மாநாடு

உலகத் தமிழ் மகாநாடு வருகிற ஜனவரி மூன்றும் தேதி சென்னையில் கூடுகிறது. தமிழகத்து அமைச்சர்கள் மாநாட்டைச் சிறப்புற நடத்த பாடுபட்டு வருகிறார்கள்.

பல தேசங்களில் உள்ள சர்வ கலாசாலைகளில் தமிழ் ஆராய்ச்சிப் பிரிவு இயங்குகிறது. மாணவர்கள் ஆர்வத்தோடு தமிழ் கற்று வருகிறார்கள். தமிழ் ஒலியைக் கேட்டிராதவர்கள் பலர் பிறமொழிகளின் உதவியால் தமிழ் மொழியைக் கற்று, பேசி வருகிறார்கள்.

அன்னிய மொழியைத் தாய் மொழியாக உள்ளவர்கள் எவ்வாறு தமிழைக் கற்கவும் பேசவும் முடியும் என்ற ஐயப்பாட்டுக்கு இடமில்லை. போப் பாதிரியாரும், கால்டு வெல்லும் தமிழுக்குச் செய்திருக்கும் சேவையை நாம் மறந்துவிட முடியுமா?

தமிழ் மொழியைக் கற்பதில் உள்ள கஷ்ட நஷ்டங்களை மாநாட்டில் பங்குகொள்ளும் அன்னியநாட்டு நண்பர்கள் விவரிக்கக்கூடும். அவர்களது குறைகளைத் தீர்த்து உதவி புரிவது நம்முடைய கடமையாகும்.

தமிழ் மொழியில் சில எழுத்துக்களை குறைத்து, சில ஒலிகளுக்குக் குறிப்புகள் சேர்த்து காலத்திற்கு ஏற்ப சில மாறுதல்களைச் செய்யவேண்டும் என்று பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் நெடுங்காலமாக கூறிவருகிறார்கள். அந்தக் குறையை நிவர்த்திக்க ஆர்வத்துடன் பற்பல மகாநாடுகளில் தீர்மானங்களும் குழுக்களும் அமைக்கப்பட்டன. அதன் முடிவு எவருக்கும் தெரியாத புதிராகவே போய் விட்டது.

மொழியின் பண்பாடு குறையாமல், அதன் ஜீவவேகம் தடைபடாமல், உலக மொழிகளுக்கு ஒப்ப தமிழ் மொழியையும் நாம் உண்மையாக பரப்பவேண்டுமென்ற ஆவல் உடையவர்களாக இருந்தால் மெய்த்துணிவோடு சில மாறுதல்கள் செய்யலாம்.

அங்குலம், கெஜம், பர்லாங்கு, படி அளவுகள் அணு, குயர், எத்தனையோ நம்மைவிட்டு அகன்றன. புதிய முறைகள் நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதனைப் போல தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையை குறைப்பதில் எவ்வித தவறும் ஏற்பட்டுவிடாது.

அன்னியர்கள் தமிழ் கற்க விழைந்தால் அவர்களுக்கு உதவியாக இருக்க இலகு பாட புத்தகங்கள் பற்பல மொழியினரும் பயில நாம் தயாரித்து ஆகவேண்டும். இப்பொழுது இந்தி மொழியினருக்கும், வங்கமொழியினருக்கும் தமிழ் கற்க அத்தகைய பாடபுத்தகங்கள் தயாரிக்கப்பட்டு அந்த மொழி மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

சேரனும், சோழனும் பாண்டியனும் இமயம்வரை சென்று தங்கள் இலட்சினைகளை இமயத்தில் பொறித்து வந்தார்கள் என்று நாம் பெருமை பட்டுக்கொள்ள இடமில்லை. தமிழ்மொழியை உலகமெல்லாம் பரப்ப அவர்கள் முனைந்திருந்தால், அது பெருமைப்படதக்கதாக இருந்திருக்கும்.

தமிழகத்தில் இந்திப் பிரச்சார சபைகள் அமைக்கப்பட்டு, இந்தி மொழியை பரப்புவதுபோல், நாம், ஆங்காங்கு தமிழ்ப் பிரச்சார சங்கள்கண்டு, மொழிவளர மொழியைக் கற்க விரும்புவோருக்கு வழங்க, மற்றவர்கள் வேட்கும்படி தமிழுக்காக இதுவரை என்ன செய்திருக்கிறோம். இவைகளை யெல்லாம் இந்த சமயத்தில் ஒருமுறை சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

மாநாட்டை, அமைப்பாளர்கள் பெரிய தேர் திருவிழாக் காட்சிபோல, உல்லாசக் காட்சியாக்கிவிடக் கூடாது. யார் யாருக்கு சிலை அமைப்பது என்பதில் இவ்வளவு பிரமாதப் படுத்தியிருக்க வேண்டாம். தமக்குப் பிடித்த நூல் பிடிக்காத நூல் என்று வரையறுத்து, அந்த நூலை உருவாக்கித் தந்த பாபத்திற்காக நூலாசிரியனை கவிஞனை அலட்சியப்படுத்துவதோ, ஒதுக்குவதோ தமிழுக்குச் சிறப்புச் செய்வது ஆகாது.

தமிழ் மொழியைப்பற்றி ஆங்கிலத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில் இடை இடையே சில தமிழ் முழக்கங்களும் இருக்குமென்று எதிர்பார்க்கலாம். தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம் உலகத் தமிழ் மாநாட்டுக்கு என்று கட்டாய வசூல் நிகழ்ந்திருக்கிறது. இவ்வாறு சேர்க்கப்பட்ட நிதியை அரசும், அமைப்பாளரும் நிதானமாக பார்த்து செலவிடவேண்டும்,

பெரிய தொகை வசூலித்து ஆடம்பரமாக மாநாடு நடத்துவது ஒருபுறம். மற்றொன்று நாம் முக்கியமாக கவனிக்கவேண்டும். ஆர்வத்தால், கவரப்பட்டு, அன்புடன் தமிழ் கற்க முன்வந்திருப்பவர்களின் முன்னிலையில் நம் மனத்தே வெறி கொண்டிருக்கும் மொழி வெறுப்பைக் காட்ட இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாமல் மிக மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். உற்சாகத்தாலோ உணர்ச்சி வசப்பட்டோ எதையாவது செய்துவைத்தால் அதன் பலன் நமது வழிமுறையினரையும் சாடும் என்ற அச்சத்துடன் அடக்கத்துடன், பொறுமையுடன் செயல்பட்டு, தமிழ்மொழி உலகமெல்லாம் பரவ, மனப்பூர்வமாக சேவை செய்ய தம்மை ஒவ்வொருவரும் அர்பணித்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டுகிறோம்.

## எழுத்தாளர் கவனத்திற்கு

1961-ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி இந்திய எழுத்தாளர்கள் யார் எவர் என்பதையும், எழுத்தாளர்களின் வாழ்க்கைக் குறிப்பினையும் வெளியிட்டார்கள். அதில் 5000க்கும் மேற்பட்ட இந்திய எழுத்தாளர்களின் வாழ்க்கை குறிப்புகள் வந்தன. அவை அகர வரிசைப்படுத்தி பிரசுரிக்கப்பட்டது. எந்த மொழியில் தாங்கள் எழுதியிருந்தாலும், அதனை இப்போது இரண்டாவது தடவையாக வெளிவர இருக்கும் இந்த வாழ்க்கைக் குறிப்பு புத்தகத்திற்கு, இந்தியாவிலுள்ள எழுத்தாளர்கள் அனைவரும் சாகித்ய அகாடமி சதர்ன் ரீஜனல் ஆபீஸ் 15 கதீடிரல் கார்டன்ஸ் ரோடு, சென்னை என்ற முகவரிக்கு குறிப்பிட்ட விண்ணப்ப பாரத்திற்கு எழுதிக்கேட்டு பெற்று பூர்த்தி செய்து அனுப்புமாறு வேண்டுகிறோம்.

ஆசிரியர்.

# அடிசிற்கினியாள்

[வி. ஜி. சீனிவாசன்]

அருமையான நூற்களஞ்சியமெனத் திகழும் மதுரை பிரும்மஞான சபையின் வாசகசாலையிலிருந்து நூலொன்று எடுத்து வந்தேன். அஃது 'எல்லிஸ்' என்பார் எழுதி வெளியிட்ட 'திருக்குறள்' மொழி பெயர்ப்பு விளக்க நூலாகும். 1819இல் பதிப்பிக்கப்பெற்ற இவ்வரிய நூல் பல வழிகளிலே மிகச் சிறந்திலங்குவது. நிற்க,

இல்லறவியலிலே இரண்டாவது அதிகாரமாகும் 'வாழ்க்கைத் துணை நலம்' என்பதிலே மூன்றுவது குறட்பாவென விளங்குவது இது:–

இல்லதெ லில்லவண் மாண்பானு லுள்ளதென்
இல்லவண் மாணுக் கடை.

What is deficient with a virtuous wife?
If in the wife defect, then what is all
This world can give?

என்பது 'எல்லிஸ்' அவர்களின் பெயர்ப்பு.

"A virtuous wife" — The term here used மாண்பு is the same that occurs in the first couplet and includes, therefore, all the excellences of disposition and conduct noticed by the commentator. — Among the latter it will be observed that "*skill in the business of the kitchen*", is considered as essential to the perfection of the matronal character of by the Hindus; as it was in former times by our ancestors, and, indeed, as it is now, by the more sober-minded of their descendents. In the following verse, which is attributed to the Author of this work and said to have been ejaculated extemporarily by him, while lying sleepless and agitated, on the night following the decease of his wife, her excellence in this art stands first in the catalogue of her good qualities.

அடிசிறகினியாளேயாககருசெயவாளேப
படிசொறபடிகடிவாளே—யடிவருடிப
பினறுருசிமுனனெழுஉமபேதையைவிடடை
வெனறுருசுமெனகணணிணே [லையோ

*When I have lost a woman who excelled in the knowledge of housewifery, who performed rightly all domestic duties, who never transgressed my word or my door, who chafed my limbs, and never slumbering until I slept, arose before I awoke; Alas! Alas! how can my eyes again know sleep!*

என்பது எல்லிஸ் அவர்களின் விளக்கம். இவர் தம பதிப்பிலல தமிழ்ச் செய்யுட்கள் சீர் பிரிக்கப்பெருமலும், ஒற்றெழுத்துக்கள் புள்ளிபெருமலும் இருப்பது காண்கிரும்.

அடிசிற் கினியாளே யாக்கஞ்செய் வாளேப்
படிசொற் படிகட வாளே—யடிவருடிப்
பின்றுஞ்சி முன்னெழூஉம் பேதையைவிட்
[டையையோ
வென்றுஞ்சு மென்கண் ணிணே.

என்று தான் இன்று எழுதுவோம். இந்தப் பாடலுக்கு இபபடியொரு பாடம் உண்டு!

அடுத்து ராபின்சன் என்பார் 1872ல் கொண்ட பாடத்தையும் கண்ட பெயர்ப்பையும் பார்பபோம்.

அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொற் றவருத பாவாய் — அடிவருடிப்
பின்றூஙகி முனனெழூஉம் பேதையே
எனறூங்கு மெனகண இரா. [போதியோ

Dost thou depart, who did'st prepare
My savoury food with skilful care;
On whom alone of womankind,
In ceaseless love, I fix'd my mind;
Who from my door has never stirr'd,
And never hast transgressed my word,
Whose palms so softly chafed my feet,
Till charm'd I lay in slumbers sweet;
Who tendest me with wakeful eyes—
The last to sleep, the first to rise?
Now weary night denies repose;
Can sleep again my eyelids close?

இனி போப் அவர்கள் 1886இல் கண்டுகொண்ட பாடத்தினையும் அவரது ஆங்கில மொழிபெயர்ப்பினையும் பார்ப்போம்.

அடிசிற் கினியாளே! அன்புடை யாளே!
படிசொற் றவருத பாவாய் – அடிவருடிப்
பின்றூங்கி முனனெழுந்த பேதையே!
என்றூங்கும் என்கண் இரா. [போதியோ

"As he lay that night, after her death and cremation, and pondered, he was heard to exclaim (there are many various readings of the verse):-" எனக் கூறிச் செய்யுளை இவ்வாறு மொழிபெயர்ப்பார் போப் அவர்கள்.

'Sweet is my daily food!
O full of love! O wife,
Obedient ever to my word!
chafing my feet,
The last to sleep, the first to rise,
O gentle one!
By night, henceforth,
what slumber to mine eyes?'

பாட்டு ஒன்றுதான்! ஆனுல், பாடவேறுபாடுகள் மூன்று! அவ்வப் பாட வேறுபாடுகளை ஒட்டி ஆங்கில மொழி பெயர்ப்புகளும் அமைந்துள்ளன. தவிர, தமிழ்ச் செய்யுட்களை ஆங்கிலத்தில் ஆக்குவதிலே, அனைவர்க்கும் முதல்வராகவும், முன்னேடியாகவும், முன்மாதிரியாகவும் விளங்குகின்ற தமிழ்த் தொண்டர் பிரான்சிஸ் வைட் எல்லிஸ் (F. W. Ellis) என்பது தெளிவாகிறதல்லவா?

---

## குழலோசை

— கவிஞர் இளங்கம்பன்

எடுப்பு

குழலூதி எனைமயக்கும் கண்ணு கண்ணு—உன்
குரலகேட்க வேண்டுமடா கணணு கண்ணு (குழ)

மேலெடுப்பு

அழகான கோபியர்கள் அள்ளி மகிழ்ந்திடவே
ஆடிப்பாடி நின்று ஆனந்தமாகவே (குழ)

முடிப்பு

நீலவண்ணமேனி நெளிந்து நெளிந்தாட
நின்விரல்கள் குழலில பதிந்து பதந்தாட
சீலத்திருமுகத்தில சிரிப்பின ஒளியாட
செங்கண்விழியாட செகம்முழுதும் ஆட (குழ)

# தமிழக அரசியல் வரலாறுபற்றி ஆராய்ச்சி நடத்தும் அமெரிக்கர்

[ திருக்குறள் தமிழ் மக்களிடையே ஈடு, இணையற்ற சிறப்புடன் விளங்குவதேன்? தமிழ் நாட்டில் நீதிக் கட்சி தோன்றியதெப்படி? சீர்திருத்தக் கருத்துக்கள் பரவியது எவ்வாறு? தனித் தமிழ் உணர்ச்சி தோன்றியதேன? – இவைபற்றி ஒரு அறிஞர் ஆராய்ச்சி செய்து வருகிறார். அவர் இந்தியரல்லர்; அமெரிக்கர். அதுவும் புகழ்பெற்ற அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றின் பேராசிரியர். தமது ஆராயச்சியின் வெற்றிக்காக அரும் பாடுபட்டுத் தமிழ் கற்று வருகிறார். தெலுங்கு அவருக்கு முன்பே தெரிந்த மொழி. தமிழகத்தின் இன்றையத் தலைவர்களின் பேச்சுக்கள் தம்மைப் பெரிதும் கவர்ந்துள்ளன என்று அவர் கூறுகிறார். மேலும் பல சுவையான தகவல்கள் கொண்டது இந்தக் கட்டுரை.]

புகழ்பெற்ற அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில் பேராசிரியர் டாக்டர். யூஜின் இர்ஷிக். இவர் தென்னிந்தியாவில் பிறந்தவர். இளம் வயதில் பெரும்பகுதியும் இங்கேயே வாழ்ந்தவர். எனவே தமிழ் நாட்டின் அரசயல், சமுதாய வரலாற்றில் அவருக்குத் தனி ஆர்வம் ஏற்பட்டதல் வியப்பில்லை. தமக்குப் பிடித்தமான இத் துறைபற்றி ஆராய்ச்சி செய்வதற்காக அவர் இப்போது மீண்டும் சென்னை வந்துள்ளார்.

அமெரிக்காவில் பெர்க்ளி நகரிலுள்ள கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் இந்திய வரலாற்றுத் துறைப் பேராசிரியர் டாக்டர் இர்ஷிக். சென்ற ஆகஸ்ட் மாதம் சென்னை வந்தார். 19-வது நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழக அரசியல் வளர்ச்சி, சமுதாயச் சீர்திருத்த வரலாறுபற்றி ஆராயவே அவர் வந்திருக்கிறார்.

புனா நகரிலுள்ள இந்தியப் படிப்புகள் பற்றிய அமெரிக்கக் கழகம் அவரது இந்த ஓராண்டு ஆராய்ச்சிக்கு உதவி செய்கிறது.

## தமிழ் கற்கிறார்

உள்ளூர் பத்திரிகைகளில் வெளியாகியுள்ள செய்திகள், கட்டுரைகள், நூல் நிலையங்களில் கிடைக்கும் குறிப்புக்கள் ஆகியவற்றின் துணையுடன் டாக்டர் இர்ஷிக் தற்போது ஆராய்ச்சி செய்துவருகிறார். அவருக்குத் தமிழ்மொழியில் ஓரளவு பயிற்சியுண்டு; இந்த மொழி அறிவை வளர்த்துக் கொள்ள அவர் அறிதின் முயன்று தமிழ் கற்று வருகிறார்.

சிறு வயதில் விசாகப்பட்டினம் மாவட்டத்தில் வாழ்ந்தவராதலால், அவருக்குத் தெலுங்கு மொழியும் தெரியும்; அருமையாகத் தெலுங்கு பேசுவார். டாக்டர் நார்மன் பிரவுன் என்னும் அமெரிக்க அறிஞரிடம் அவர் பென்ஸில்வானியா பல்கலைக் கழகத்தில் தமிழ் பயிலத் தொடங்கினார். டாக்டர் மில்ட்டன் ஸிங்கர் தலைமையில் சிக்காகோ பல்கலைக்கழகத்தில் பயில்கையில் அவரது தமிழ்ப் பற்று மேலும் வளர்ந்தது.

சிக்காகோ பல்கலைக்கழகத்தில் பிஎச். டி. பட்டம் பெற்றவர், டாக்டர் இர்ஷிக்; டாக்டர் பட்டம் பெறுவதற்கு அவர் மேற்கொண்ட ஆராய்ச்சிப் பொருள்: 1916 முதல் 1929 முடியத் தென்னிந்தியாவில் பிராமணரல்லாதார் இயக்கத்தின் வளர்ச்சி. ஆராய்ச்சிப் பணிக்காக 1961-ல் அவர் இந்தியா வந்து, ஒன்றேகால் ஆண்டு இங்கு தங்கினார். 'தென் இந்தியாவில் அரசியலும், சமுதாயப் பிணக்கும்" என்ற தலைப்பில் அவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையை விரைவில் கலிஃபோர்னியா பல்கலைக்கழகம் வெளியிடும்.

## நீதிக் கட்சிக் கதை

தற்போது அவர் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டுள்ள காலம் 1815–1915; அதாவது அவரது முதல் ஆராய்ச்சிக்கு முந்திய காலம். தமிழ் நாட்டில் முதல் தலைமுறை அரசியல் தலைவர்கள் – அதாவது நீதிக் கட்சி— தோன்றியதற்குக் காரணங்கள் என்ன; வளர்ந்த விதம் எப்படி என்று கண்டறிய முயலும் அவரது தற்போதைய ஆராய்ச்சி. சமுதாயச் சீர்திருத்த இயக்கம், தீண்டாமை பற்றிய மனப்பாங்கு, தமிழக-ஆந்திர சமுதாயச் சீர்திருத்த இயக்கங்களுக்கு இடையேயுள்ள வேறுபாடு, தமிழ்–தெலுங்குப் பிரிவினை தோன்றிய விதம் ஆகியவை பற்றியும் அவர் ஆராய்வார்.

தனித் தமிழ் உணர்ச்சி உருவாகக் காரணமாக இருந்த பின்னணி எது என்று கண்டறியும் முயற்சி அவரது ஆராய்ச்சி முழுமைக்கும் அடிப்படையாக அமையும். சிக்காகோ பல்கலைக் கழகத்திலேயே டாக்டர் இர்ஷிக் இத்திசையில் ஆராய்ச்சி தொடங்கினார். அப்போதுதான் அவர் முதன் முறையாக சுப்ரமண்ய பாரதி பற்றியும், தனித் தமிழ் இயக்கத் தலைவர்களின் ஒரு முழுத் தலைமுறை பற்றியும் அறியலானார்.

## தமிழின் சிறப்பு

தமிழ்நாட்டின் வரலாறு பற்றிய எந்த ஒரு ஆராய்ச்சிக்கும் தமிழ் மொழி மிக மிக இன்றியமையாதது என்று கருதுகிறார், இந்த அமெரிக்க அறிஞர். படிக்கப் படிக்க இன்பமூட்டும் ஒரு மொழி தமிழ்; அது நுணுக்கம் மிக்கது என்று அவர் கருதுகிறார். தினந்தோறும் ஆர். மணியனிடம் அவர் தமிழ்ச் சொற்றொடரியலும் இலக்கணமும் கற்று வருகிறார். ஏராளமாக விற்பனையாகும் நாளிதழ்கள் அவரது பாடத்துக்கு உறுதுணையாக விளங்குகின்றன. இன்றையத் தமிழகத் தலைவர்களின் இலக்கிய நயம் படைத்த சொற்பொழிவுகளும் அவர்கள் கூறும் குட்டிக்கதைகளும் தம்மை மிகவும் கவர்ந்துள்ளன என்று டாக்டர் இர்ஷிக் கூறுகிறார்.

குறிப்பாக இரு ஆய்வுப் பொருட்கள் அவரது ஆவலைப் பெரிதும் தூண்டியுள்ளன; இவை குறித்து அவர் விளக்கம் காண விரும்புகிறார். ஒன்று: தமிழ் நாட்டில் பகுத்தறிவு இயக்கத்தின் வளர்ச்சி; மற்றொன்று: திருக்குறளுக்குள்ள பெரும் செல்வாக்கு.

தென்னகம் பற்றி டாக்டர் இர்ஷிக் இவ்வளவு ஆர்வம காட்டுவானேன்? தமது பிறப்பும் வளர்ப்புமே இதற்கு முக்கிய காரணம் என்று அவர் கூறுகிறார். அவரது தந்தையார் மறைத்திரு. லியான் இர்ஷிக், ஆந்திராவில் 35 ஆண்டுகள் லூதரன் பிரிவு மதகுருவாகப் பணியாற்றியவர். (தற்போது ஓய்வுபெற்று, கானடா நாட்டில் குடியேறி வாழ்ந்து வருகிறார்.) அவர் தெலுங்கு மொழியில் ஒரு அறிஞர். பென்ஸில்வானியா பல்கலைக் கழகத்தில் அவர் தெலுங்கு கற்றார். தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் வல்லவர். அன்னையார். பேராசிரியர் இர்ஷிக் சிறு வயதில் ஆந்திரத்தில் தம் பெற்றோருடன் தங்கி வாழ்ந்தார்; ஆனால் கோடைக்கானலில் படித்து வந்தார். எனவே, அவர் தமிழக வரலாற்றில் ஆர்வம் காட்டுவதில் வியப்பிலை, அல்லவா?

## அமெரிக்கப் பணி

கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் அவர் விரிவாக இந்திய வரலாறு

6-ஆம் பக்கம் பார்க்க

# மதிப்புரை

—(o)—

[குஜராத்திச் சிறுகதைகள்:– தமிழாக்கம்: ஹரிஹர சர்மா. பக்கங்கள்: 278. வெளியீடு: சாகித்ய அகாதெமி, புதுடில்லி. விலை ரூ. 5-50]

இந்நூலில் தூமகேது முதலான பதினாறு ஆசிரியர்கள் எழுதியுள்ள சிறு கதைகள் உள்ளன. பிற இந்திய மொழிகளில் சிறு கதைத்துறை நன்கு வளர்ந்திருப்பது போலவே குஜராத்தி மொழியிலும் நன்கு வளர்ந்திருப்பதை இதன் வாயிலாக அறியமுடிகிறது. இச்சிறு கதைகளைக்கொண்டு குஜராத்தி மக்களின் பல்வேறு வாழ்க்கை நிலைகளையும் மனப்போக்குகளையும் அறியமுடிகிறது.

தூமகேது எழுதிய ''மண்ணுலகும் விண்ணுலகும்' என்னும் கதை பொன்னால் அதாவது பணத்தால் எப்படி நாடு கெட்டழிந்துபோகும் என்பதை அழகுற விளக்குகிறது. 'நீ பணம் உண்டுபண்ணினால், இப்போது மனிதர்களிடமிருந்து அன்பு போய்விடும். உண்மையான அன்பை மனிதர்கள் விலைக்கு வாங்கக்கூடிய பொருளாக எண்ணுவார்கள். இவ்வுலகில் மனிதர்கள் அன்புக்கு அல்ல, செல்வத்திற்கும், அதிகாரததிற்கும், தற்புகழ்ச்சிக்கும், சமூகத்தில் வீண பெருமைக்கும் முதலிடம கொடுக்கும் சூழ்நிலை ஏற்படும். இங்கிருந்து அன்பின் உருவமே ஓடிவிடும்' என்று சுகேசி கூறுவதாக வரும் பகுதி சிந்தனைக்கு விருந்து,

கடவுளின் காப்பாளன் கதை உண்மையான பக்தியை விளக்குகிறது. 'புத்தி விஜயன்' கதை தன்னலத்தால் அழிந்த ஒரு அறிஞனைப் படம் பிடித்துக் காட்டுகிறது. தன் பெண்ணும் கைம்பெண் ஆகும் கோலத்தைக் காணும் ஒரு கைம்பெண்ணின் கனிந்த நெஞ்சத்தைக் காட்டுகிறது என் சம்பாவின் கணவன் என்னும் கதை. வாழ்க்கைத் தளத்திறகீழேயுள்ள குறவர் கூட்டம் பற்றிய அழகிய உண்மையான படப்பிடிப்பு குறவன் வேலனின் மரணம். 'திருமாங்கலயம்' கதை கைம்பெண்ணான தாய் தன் மகனுக்குத் தன் மாங்கலியத்தை விற்று சைக்கிள் வாங்கித் தருகின்ற ஏழ்மை நிலையை உள்ளம் நெகிழக் கூறுகிறது.

தான் கெடுத்து இறந்துபோன ஒரு பெண்ணின் பேய் பற்றிய அச்சத்தால் அல்லற்படும் ஒருவனின் உள்ளத்தை நன்முறையில் காட்டும் படப்பிடிப்பு 'நீலியின் ஆவி' ஆகும்.

'நீலமணி' கதையில் விஜயன் என்னும் வில்வீரன்பால் இரு கன்னியர் காதல் கொள்ளுகின்றனர். ஒருத்தி பொறாமையால் அவனைத் தன் அம்பால் வீழ்த்திவிடுகிறாள். பின்னர்தான் அவன் அந்த மற்ற ஒரு காதலியின் அண்ணன் என்பது புரிகிறது. ஆசிரியர் கதையைச் சொல்லிச் செல்லும் முறை சுவையாய் உள்ளது.

'ரத்தபாசம்' கதை தன் மகளுக்குப் பித்துப் பிடித்துவிட அதனால் தவிக்கும் தாயின் உள்ளத்தைப் படம் பிடிப்பதாகும்.

'யாருடைய ரத்தம்' ஒரு முரடன், ஒரு கள்ளங் கபடமற்ற பெண்ணை ஒரு கொடியவன் கற்பழித்துவிட்டான் என்பதறிந்து கொதிக்கிறான். அவன் தன் மகன்தான் என்பதறிந்தும் அவனைக் கொல்ல விரட்டுகிறான். பின்னர் தன் கெட்ட பழக்கங்களே தன் மகன் ரத்தத்தில் ஊறி வந்திருக்கிறது என்பதறிந்து மனம் வருந்துகிறான்.

ஒரு அரசியின் தோட்டியாக வேலை பார்ப்பவள் தன் அரசி செத்தபோது அதற்குக்கூட அழாமல் அவளின் சேலை தனக்குக் கிடைக்காமல் தன் ஓரகத்திக்குக் கிடைத்து விட்டதே என்றழுவது உள்ளத்தின் இருள் மூலையை சுட்டிக்காட்டுகிறது.

'பந்தனம் ஒரு இழிபழக்கம்' கதை அபின் பழக்கத்திற்கு அடிமைப்பட்ட ஒரு பெண்ணின் அவல வாழ்வை நெஞ்சுருக விளக்குகிறது.

பொதுவாகக் கதைகள் நன்கு இருப்பினும் மண்ணுலகும் விண்ணுலகும், திருமாங்கலியம, நீலியின் ஆவி, யாருடைய ரத்தம், பந்தனம் என்னும் கதைகள் சிறப்பாக உள்ளன.

மொழிபெயப்பு நல்ல முறையில் எளிய தமிழில் அமைந்து சிறப்பு செய்கிறது. இதைப்போன்ற நூல்கள் குஜராத்தி மக்களை நாம் அறிந்துகொள்ளப் பெரிதும் பயன்படும் என்று உறுதியாய்க் கூறலாம்.

ஆனால் சாகித்ய அகாதெமி நூல்கள் மக்கள் வாங்கும் நிலையில் விலை மலிவாக இல்லை என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டியுள்ளது. இப்படி விலை இருப்பின் மக்களிடை இலக்கியம் பரப்பும் அகாதெமியின் நோக்கம் நிறைவேறுதல் ஐயத்திற்குரியதே யாகும்.

த. மணிமாறன்.

---

## 5-ஆம் பக்கத் தொடர்ச்சி

கற்பிக்கிறார். தொன்மையான மொகஞ்சதாரோ காலம் முதல் தற்கால வரலாறு ஈறாக இந்தியாவின் பழமை குறித்து அவர் சொல்லிக் கொடுக்கிறார். தறகால வரலாற்றுக்குச் சிறப்பிடம் கொடுக்கிறார். பட்டம் பெறப் படிப்பவர்களுககாக விரிவுரைகள் ஆற்றுகிறார்; ஆராய்ச்சி மாணவர்களுக்காகக கருத்தரங்குகள் நடத்துகிறார்.

தென் இந்திய வரலாற்றில் அவர் கொண்டுள்ள தனி ஈடுபாட்டுக்கு ஒரு சான்று, அவரது மாணவர்களில் ஒருவர் தறபோது சென்னை வந்து, தமது டாக்டர் பட்டத்துக்காக ஆர்க்காட்டு நவாப் (18-வது நூற்றாண்டு) பற்றி ஆராய்ச்சி செய்து வருவதாகும்.

அமெரிக்காவில் இந்தியா பற்றிய பாடங்களில் தற்போது பேரார்வம் ஏற்பட்டுள்ளது. ஏராளமான ஆராய்ச்சி மாணவர்கள் டாக்டர் பட்டம் பெறுவதற்காக இந்திய இயல்கள் பற்றி ஆராய்ந்து வருகின்றனர். அவர் பணியாற்றும கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில் மட்டுமே எட்டுப் பத்துப் பேர இவ்வாறு ஆராய்ச்சி செயதுவருகிறார்கள். இன்று இந்திய மொழகள் படிப்பதற்கு அமெரிககாவில் நல்ல வாயப்புகள் உண்டு; ஐந்து ஆண்டுகளுக்கு முன்புவரைகூட இதுபோன்ற வசதிகள் இருந்ததில்லை.

பேராசிரியர் இர்ஷிக் இளம் வயதினர்; அவருடன் அவரது மனைவியாரும், 2½ வயது மகளும், இரு கைக் குழந்தைகளும் சென்னையில் இருக்கின்றனர். கைக்குழந்தைகள் இரட்டைக் குழந்தைகள்; ஒன்று ஆண; மற்றொன்று பெண.

"எழுத்தாளன்"
(மாத இதழ்)
ஆண்டுமலர் உள்பட
வருட சந்தா ரூ. 3—00
தனிப்பிரதி 25 பைசா
சிறப்பு மலர் தனி.
விபரங்களுக்கு: நிர்வாகி,
"எழுத்தாளன்"
24, தேரடிக்கடைத் தெரு,
திருச்சி-2.

தொழிற்சாலையொன்றில் உதவி மேஸ்திரி இவர். கடும் உழைப்பால், படிப்படியாக, ஏழு ஆண்டுகளில் இந்தப் பதவிக்கு உயர்ந்திருக்கிருர். "தளரா உழைப்பிருந்தால் நானென்ன, யாருமே இந்த மாதிரி பதவியில் உயர்வு பெற முடியும்," என்கிருர் அவர். "என்னுடன் வேலை செய்யும் சகாக்களில் சிலர் நிறைய குழந்தைகள் இருப்பதால் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள். என்னைப் பொறுத்த வரை நான் சிறிது பொறுப்புடன் நடந்து கொண்டேன. எனக்கு இரண்டு குழந்தைகள்தான். அவர்களை நன்கு வளர்த்து



ஆளாக்கிவிட வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். என் மகிழ்ச்சிக்கு என்ன குறை?"

## மகிழ்வுறுகிருர் அவர் —

## நீங்கள்...?



davp 67/184

Regd. No. M. 7308 Phone No. 2203 EZHUTHALAN 15—12—67

நாடக விமரிசனம்

# பலாப்பழம்

தற்கால திரைப்படங்களின் அமைப்பு முறைகளையும், நடிகர்-நடிகைகளின் நடிப்பையும் காண்பவர்கள் வருங்கால நாட்டுத் தலைவர்களான இந்நாள் குழந்தைகளைப்பற்றி கவலைப் படுவது உறுதி. பண்பைக் கெடுக்கும் கதைகளும். நடிப்பும் எதிர்காலத்தின் மீது பயங்கர கற்பனைகளை உண்டாக்கி வருகின்றன.

இந்த இழி நிலைகளுக்கு அறைகூவல் விடுவது போல், குழந்தைகளுக்கு தகுந்த-குழந்தைகளை நல்ல தலைவர்களாக உருவாக்கக் கூடிய நாடகங்களை நடத்தி சாதனைகளைச் செய்து இருக்கிறார்கள்-செய்து வருகிறார்கள்-டி. கே. எஸ். நாடகக் குழுவினர்.

அவர்கள் ஏற்கனவே நடத்திய 'அப்பாவின் ஆசை' நாடகமும், இப்போது புதிதாக அரங்கேற்றி உள்ள 'பலாப்பழம்' நாடகமும் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு — குழந்தைகளின் மன வளர்ச்சிக்கு உதவக் கூடியவை.

அப்பாவின் ஆசை- குழந்தைகளுக்கான சமூகக் கதை — பலாப்பழம் - குழந்தைகளுக்காக சரித்திரச்சூழ்நிலையில் அமைக்கப்பட்ட கதை.

### நீதி பொதிந்தது

"ஓடி விளையாடு பாப்பா; ஓய்ந்திருக்கலாகாது பாப்பா. கூடி விளையாடு பாப்பா. ஒரு குழந்தையை வையாதே பாப்பா!" என்ற பாரதியாரின் பாட்டல் வரிகள்தான் பலாப்பழம் - நாடகத்தின் கதைக் கரு.

ஏழை என்று கருதி ஒரு சிறுவனை இளவரசன் ஏசிப்பேசுகிறான். சோம்பலும் கூடிவாழும் பண்பும் அறியாத அந்த இளவரசன் ஏசப்பட்ட சிறுவனால் தண்டிக்கப்பட்டு மனம் மாற்றம் அடைவது, கதையின் அடிப்படை.

'நல்லபாம்பு' போல் தோற்றத்திற்கு அழகாகவும், மனத்தின் உள்ளே தீய குணமும் கொண்டவர்களை வெறுத்து ஒதுக்க வேண்டும்; 'தெளிந்த நீரோடை' போல் உள்ளும் புறமும் தூய்மையாக விளங்குவோருடன் தாராளமாகப் பழகவேண்டும்; வெளித் தோற்றத்திற்கு கடுமையாகவும் மனதில் இனிய குணமும் கொண்டு 'பலாப்பழம்' போல் விளங்குபவர்களின் நட்பை இழந்துவிடக் கூடாது—இது 'பலாப்பழம்' போதிக்கும் பாடம்!

### படைப்பு

அப்பாவின் ஆசை நடகத்தை எழுதிய திருச்சி பாரதன்தான் பலாப்பழம் நாடகத்தின் கதை—வசனம்—பாடல்களை எழுதி இருக்கிறார். முன் நாடகத்தைப் போலவே இந்நாடகமும் தமிழ் நாடு சங்கீத நாடகச் சங்க மானிய உதவிப் போட்டியில் பரிசு பெற்றுள்ளது, தனிச் சிறப்பு.

கதா-பாத்திரங்களின் பெயர்களைப் பாருங்கள். மன்னர் — அன்பரசர். அமைச்சர் - மதிவாணர். இளவரசன் இளங்கோ. அன்பரசரின் செல்விகள் பூங்கொடி, செங்கனி. தளபதி — வில்லவன் கோதை. இவர்களைக் கொண்ட நாடு — 'இன்பபுரி' யாகத் தானே இருக்க முடியும்! இந்தப் பெயர்ப் பொருத்தங்களைப் பாராட்டுகிறார், அடுத்த நாட்டு மன்னர்-- குணசீலர்! அண்டை நாடுகள் சண்டை நாடுகளாக விளங்கும் போது, மனமாரப் பாராட்டக் கூடியவர் ஒருவர் இருக்க முடியும் என்றால் அவர் குணசீலராகத்தானே இருக்கவேண்டும்!

மன்னர் முன் இளவரசனால் குற்றவாளியாக நிறுத்தப்படுகிறான், 'ஏழைச் சிறுவன்' அழகன்! விசாரணை முடிவில், அழகன் இளவரசனையே குற்றவாளியாக்கி தண்டனையும் வாங்கிக் கொடுக்கிறான்! மனுநீதிச் சோழன் வரலாற்றை அழகன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் இடம், நாடகத்தில் சுவையான திருப்பம்!

குழந்தைகளுக்கேற்ப உரையாடல்கள் மட்டுமல்ல; பாடல்களும் திருச்சி பாரதனால் எளிமையாக எழுதப்பட்டு உள்ளன.

### நடிப்பு

நாடகத்தில் படைப்பு மட்டும் நன்றாக இருந்தால் போதுமா? நடிப்பும் அமைய வேண்டுமல்லவா? இந்த நாடகத்தில் அழகனாக வரும் கணேசன் என்ற சிறுவன், வருங்காலத்தில் 'சிவாஜி கணேசன்' போல சிறப்பெய்தும் முத்திரை தெரிகிறது. 'அப்பாவின் ஆசை' யில் சோகவேடம் ஏற்று கண்கலங்க வைத்த கணேசன், இதில் மக்குப்பையனாக அநாயாசமாக நடித்து மனதைக் கவர்கிறான். 'அப்பாவின் ஆசை' யில் சக்கைபோடு போட்ட அண்ணாதுரைக்கு இந்த நாடகத்தில் திறமையைக் காட்ட போதிய வாய்ப்பு இல்லை! கொடுத்ததில் குறை வைக்கவில்லை. குண்டு பையன் காதர் நடிக்கவேண்டியதில்லையே!

நாடகத்தை திறமையாக இயக்கியுள்ள அவ்வை டி. கே. சண்முகம் நடிக்கவில்லை. அந்தக் குறையை அவருடைய செல்வி மனோன்மணி தனது கச்சிதமான நடிப்பால் போக்கி விடுகிறார். அவளுடன் நடிக்கும் சசிகலாவும் 'பலே' போடவைக்கிறாள்!

நல்ல முறையில் தன் குழந்தை வளராவிட்டால் ஒரு தந்தை மனம் எவ்வளவு வேதனைப்படும் என்ற உண்மையை அடக்கமான நடிப்பால்—கம்பீரமான மன்னர் தோற்றத்தோடு டி. கே. பகவதி நன்கு விளக்கிக் காட்டுகிறார். நகைச்சுவையாளர் வேடம் டி. என். சிவதாணுக்கு. அரண்மனையில் மனித எலிக்குஞ்சுகளை அவர் பிடித்துவரும் கட்டம், மறக்கமுடியாதது!

### முடிப்பு

அழகனும், இளங்கோவும் மேடையில் உண்மையில் வாட்போர் புரிவது, சற்று அதிக பயங்கரமாகவே இருக்கிறது. அதேபோல், அகரவரிசை நீதிப்பாடலை பூங்கொடி, செங்கனி இருவரும் பரத நடனமாக ஆடிக் காட்டுவது, கூடுதலான பூரிப்பைத் தருகிறது.

வள்ளுவர், கடற்கரை, ஆயுதக் கூடம், போட்டி நடக்கும் மேடை போன்ற காட்சியமைப்புக்கள், சகோதரர்களின் கலைநுணுக்கத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளன.

அழகன், இறை வணக்கம் செய்யும் காட்சியின் நீளத்தை சற்று குறைத்தால் விறுவிறுப்பு கூடும்.

ஒரு சிறு கதையை நாடகமாக ஆக்கி, நல்ல நீதிகளைப் புகுத்தி குழந்தை உலகத்துக்கு 'பலாப்பழ' மாக வழங்கியுள்ள திருச்சி பாரதன், திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் குழந்தை இலக்கியப் பிரிவின் தலைவராக இருந்தவர் என்பதை எண்ணி சங்கம் பெருமை அடைகிறது. உன்னதமான நாடகக்கலையை அதே உயர்ந்த லட்சிய நோக்கில் வளர்த்துக் காப்பதில் 'பலாப்பழம்' நாடகம் மூலமாகவும் டி. கே. எஸ். சகோதரர்கள் ஆற்றியுள்ள கடமை தொண்டுகள் காலத்தை வெல்லக் கூடியது என்பது உறுதி.

— மா. சவுந்தரராஜன்

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-. Asst. Editor: T. L. Panchapakesan.